உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர்

அருளிச்செய்த

# போற்றிப்பஃறொடைமூலம்.

இதற்றுறையுடன்

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

காணியம்பாக்கம்

முருகேசமுதலியாரால்

சென்னை;

இந்துதியலாஜிகல்யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

௧௮௯௨.

உ

திருச்சிற்றம்பலம்.

# போற்றிப்பஃறொடை

## மூலமும் உரையும்.

---

பூமன்னு நான்முகத்தோன் புத்தேளி ராங்கவர்கோன்
மாமன்னு சோதி மணிமார்ப - னாமன்னும்
வேதம்வே தாந்தம் விளக்கஞ்செய் விந்துவுட
னாதாந்த நல்வேதம் - போதத்தா
லாமளவுந் தேட வளவிறந்த வப்பாலைச்
சேம வொளியெவருந் தேறும்வகை - மாமணிசூழ்
மன்று ளிறைஞ்சப் பிறவி வழக்கறுக்க
நின்ற நிருத்த நிலைபோற்றி.

எ - று. பொற்றாமரைப்பூவி னிலைமைபெற்று நான்முகத் தோடெழுந் தருளியிருக்கிற பிரமாவுந் தேவர்களு மவர்களுக்கு மன்னனாகிய தேவேந்திரனுந் திருமகள்பொருந்திய மார்பி னிருந்து பிரகாசமுடைய கௌத்துவமணி தரித்திருக்கிற விஷ்ணுவுஞ் சகலபொருண்மையு நாவிலிருந்து சொல்லுகிற வேதங் களும் வேதமுடிவான வுபநிடதங்களுஞ் சகலவறிவும விளங் கச்செய்கிற விந்துவை மதற் குள்ளொளியாகிய நாதமுங் கூடி லையுந் தத்தமிதயத்திற் றோன்றிய போதச்செயல்களா லாமள வுந்தேடவு மளவுபடாம லப்பாற்பட்டிருக்கிற பேரின்பவொ ளியாகிய பதி யாத்மாக்களை யிரக்ஷிக்க வேண்டுமென்கிற கிரு பைசரித்து எவர்களும் பத்தியுடனேதரிசித்து மலமாயாகர்மங் நீத் தெளிந்து தேறும்படிக்கு மிருந்த விரத்தினமணிகள் சூழ்ந்

துவிளங்காநின்ற வழகிய திருச்சிற்றம்பலத்துள் ஞானப்பி காச நிறைந்து தோன்ற நின்று ஆன்மாக்களுடைய பிறவி தொடர்பறுக்கச்செய்யு மாநந்ததிருத்தநிலை யெம்மை யி க்ஷிக்க.

குன்றாத, பல்லுயிர்வெவ்வேறு படைத்துமவைகாத்து
மெல்லையிளைப்பொழிய விட்டுவைத்துந்-தொல்லையுறு
மந்தமடிநடுவென் றெண்ணவளவிறந்து
வந்தபெரியவழி போற்றி.

எ - து. அநாதியா யெண்ணிறந்த வான்மாக்கள் மோக்ஷ மடைந்திருக்கவுங் குறைவில்லாம னித்தியமா யளவிறந்திரு கிற பெத்தான்மாக்களைக் கன்மத்துக்கீடான தேகங்களிற் சரா யுஜம் அண்டஜம் சுவேதஜம் உற்பீஜம் ஆகிய நால்வகையோ னிகளினு மாறிமாறி வேறுவேறாகப் படைத்து மவ்வான்மா களுக்குள்ள வரியவினைப்போகங்களை யேறாமற் குறையாமற் கூட்டிப் புசிப்பித்தும் சர்வசங்காரகாலத்தி லான்மாக்கள் சக லாவத்தைப்பட்டுப் பிறந் திறந் தலைந்து திரிந்த விளைப்பு நீங கும்படிக்குக் காரணகேவலாவத்தையி லொடுக்குவித்தும் அநா தியேதொடுத் தாதியாய்ச் சிருஷ்டித்துந் திதித்துஞ் சங்கரித்து மளவிறந் தாதிநடுவந்தமற்று வருகிற பெரிய கிருத்தியவழி யெம்மையிரக்ஷிக்க.

மூன்றுற்ற, செல்லுக்குமிதவிடு நீடுசெம்பிற்காளிதமும்
தொல்லைக்கடவேன்றத் தோன்றுவரு - மெல்லா
மொருபுடையொப்பாயத்தா னுள்ளவாறுண்டா
யருவமாயெவ்வுயிரு மார்த்தே - யுருவுடைய
மாமணியையுள்ளடக்கு மாநாகம்வன்னிதனைத்
தானடக்குங்காட்டத் தகுதியும்போன் - ஞானத்தின்
கண்ணைமறைத்த கடியதொழிலாணவத்தா

லெண்ணுஞ்செயன்மாண்ட வெவ்வுயிர்க்கு-மூண்ணுடிக்
கட்புலனுற்காணுர்தங் கைக்கொடுத்தகோலேபோற்
பொற்புடையமாயைப் புணர்ப்பின்கண் - முற்பாற்
றனுகரணமும்புவன முந்தந்தவற்றுன்
மனமுதலால்வந்த விகாரத்தால் - வினையிரண்டுங்
காட்டியதனுற் பிறப்பாக்கிக்கைக்கொண்டு
மீட்டறிவுகாட்டும் வினைபோற்றி.

எ - து. ஆன்மாக்க ணித்தியமாயிருக்கச் சிருஷ்டிப் பட்டுந் திதிப்பட்டுஞ் சங்காரப்பட்டும் வருவானேனென்னில் அநாதியிலே மலத்திலே பந்திக்கப்பட் டிருக்கையினுலே மல நீங்கும்படிக்குக் கத்தா கிருபையினுலே செய்வித்ததா யிருக்கும். ஆனுல் மலமான்மாக்களைப் பந்தித்த தெப்படியென்னில் முன்னே யுண்டான நெல்லுக் குமிதவிடுமுளை முற்பிற்பாடில்லாம லநாதியிலே கூடத்தோன்றின தாயிருக்கும். இதிலாணவமல மான்மாவி னறிவைமறைத்த தெப்படியென்னின் செம்பினுடைய நிறத்தைக் காளிதங்கூடவுதித்து மறைத்தது போன்றிருக்கும். கத்தாவினுடைய வியாபகத்திலே யான்மாக்க ணிறைந்திருக்கவு மாணவமல முயிரைமறைத்த தெப்படியென்னில் பழமையாகியகடல் வியாபகத்திலே நிறைந்திருக்கிற தண்ணீரை யுப்புக்கலந்து பிடித்திருப்பதுபோன்றிருக்கும். இப்படியெல்லாம் வெவ்வேறு யொருபுடையொப்பாகக்கத்தா வுள்ளவன்றேயுண்டா யருவமாய் மூவகை யான்மாக்களையு மாணவமலம்பிடித் துருவையுடைய மகத்தான மாணிக்கமணியை நஞ்சுவாய்க்கு ளடக்கின மகத்தாகிய சர்ப்பம்போலவும் பச்சையாய் முளைத்து விறகாகுமட்டு மக்கினியைத் தெரியாமன் மறைத்து வைத்திருந்த காட்டம்போலவு மான்மாவினுடைய ஞானக்கண்ணை மறைத்த கடுந்தொழிலையுடைய

வாணவமலத்தினாலே யறிவுஞ்செயலு மிறந்த சகலவுயிர்களுக்
குங் கத்தா கிருபையினாலே நன்று யவர்களிச்சையை நாடிப்
பார்த்துக் கட்புலனினாற் காணாத பிறவியந்தகர்க் குரிமையுள்
ளவர்களிச்சித்தபடிக்குக் கோலைக்கொடுத்திச்சித்த விடங்க
ளிலே கொண்டுபோய் விடுகிறதுபோலப் பொலிவினையுடைய
மாயையின் காரியமான தனுகரண புவன போகங்களையு முன்
னே யுண்டாக்கிக்கொடுத்து இச்சித்த புவனங்களிலே யிச்சித்த
வினைப்போகங்களையுங் கூட்டிமுடித்துப் புசிப்பிக்கையினு மந்த
வாணவமல மயக்கத்தாற் கத்தாவுபகாரத்தை மறந்து நாமென்
கிற வந்தக்கரண விகாரஹிதாஹிதமுண்டாகையாற் புண்ணிய
பாவ மிரண்டுமுண்டாம்படி காட்டி யந்தப் புண்ணிய பாவத்
தினாற் பிறக்கும் பிறவியுண்டாக்கி யதனாற்செய்யு மிருவினை
களையு மேற்றுக்கொண்டு மீண்டு மந்தவினைப்போகங்களைப்
புசிப்பதற்குக் கலாதிஞானங்களையுங் காட்டுங் கிருபைத்தொழி
லெம்மையிரக்ஷிக்க.

நாட்டுகின்ற, வெப்பிறப்புமுற்செயிருவினையானிச்சயித்
பொற்புடையதந்தைதாய் போகத்துட்-கர்ப்பமாய்[துட்
புல்லிற்பனிபோற் புகுந்திவலைக்குட்படுங்கா
லெல்லைப்படாவுதரத் தீண்டியதீப் - பல்வகையா
லங்கேகிடந்த வநாதியுயிர்தம்பசியா
லெங்கேனுமாக வெடுக்குமெனு-வெங்கும்பிக்
காயக்கருக்குழியிற் காத்திருந்துங்காமியத்துக்
கேயக்கைகான்முதலா யெவ்வுறுப்பு-மாசறவே
செய்துதிருத்திப்பின் பியோகிருத்திமுன்புக்க
வையவழியேகொண் டணைகின்ற-பொய்யாத
வல்லபமே போற்றி.

எ - து. கத்தா வான்மாக்களுக்கு வினைப் போகங்களைப்
புசிப்பிக்கிறதற்குத் தேகங்களைக் கூட்டுகிற முறைமை சொல்

லுமிடத்து முன் பாகமங்களிலே சொல்லப்பட்ட வெண்பத்து நான்கு நூறாயிர மியோனிபேதப் பிறப்பின்வகை யெல்லா. முன்செய்த விருவினைக்கீடாக வுண்டாம்படி திருவுள்ளத்திலே நிச்சயித்துப் பலபிரகாரம் வெவ்வேறு தேகபேதங்களை யுண்டாக்குவதுமல்லாமல் மானிடதேக முண்டாக்குவ தெப்படியென்னின் அழகுபொருந்திய தந்தையுந் தாயுங் காமவிகாரந் தீரும்படிக்குச் சையோகபோகஞ் செய்யுங்காலத்து அவர்களுக்குப் பிள்ளைபே றுண்டில்லையென்பது மறிந்து தாயினுடைய கருப்பத்திற் றந்தையானவன் புல்லினுனியிற்றங்கிய பனித்திவலைபோன்ற விந்துவை விடும்போ ததற்குள் ளுயிரை யடக்கி யுட்கருப்பாசயத்திற் சுரோணிதத்துடனே கலப்பித்திருத்தி யந்த விந்து தாய்வயிற்றி லளவற்றிருக்கிற வுதராக்கினியினு லெரிசுவராமலும் பலவகையாகிய வந்தவயிற்றுக்குட் கிடந்த வநாதி யுயிர்களாகிய புழுக்கள் தங்கள் பசியினாலே வந்தவிந்துவை விரைவிலே யெடுத்துப் புசியாமலும் வெய்ய கும்பிநரகம்போன்ற காயக்கருக்குழியிற் காத்திருந்து வினைக்கீடான கைகால் முதலாகிய சகலவுறுப்புங் குற்றமறச்செய்து அழகுபொருந்தத் திருத்திப் பின்பந்தத் தேகத்தையெடுத்து நேரோ யோகத்திலிருத்தித் திரிகால வர்த்தமானங்களையு மறியும்படிக் குணர்வையுங் கொடுத்துப் பத்துமாதவரைக்கும் புசிப்புங்கொடுத்துப் பின்பு பூமியிலே பிறக்கும்போ திரண்டுகையுஞ் சிரசிலேகுவித்த பாவனையாய்த் தலைகீழாய் வரும்படிசெய்து முன்புகுந்த சிறுவழியைப் பெருவழியாக்கி யுயிர் துன்புற்றிறவாம லுயிருக்குயிரா யணைந்திருந்து வெளியிலே யிழுத்துக் கொண்டு வருகிற மெய்ம்மையாகிய வல்லப மெம்மையிரக்ஷிக்க.

அம்மாயக்கா ருன்மறைப்ப
நல்லவறி வொழிந்து நன்குதீ - தெல்லையுறு
வக்காலந் தன்னிற் பசியையறிவித்தழுவித்

தூக்கா விசோர்த்தா யுண்ணடுங்கி - நீக்கோங்குஞ்
சிந்தையுருகமுலையுருகுந் தீஞ்சுவைப்பால்
வந்துமடுப்பக்கண்டு வாழ்ந்திருப்பப் - பந்தித்த
பாசப்பெருங்கயிற்றாற் பல்லுயிரும்பாவிக்க
நேசத்தைவைத்த நெறிபோற்றி.

எ - து. தாய்வயிற்றைவிட்டு பூமியிலே பிள்ளை பிறந்த வுடனே சரீரத்துக்குக் காரணமான மாயைச் சண்டமாருதம் போலலைத்துமயக்க முன்கருப்பத்திலிருக்கும்போ திந்தப் பிற வித்துன்பத்தை நீக்கிக்கொள்ளவேண்டுமென் றவ்விடத்திலே நினைத்திருந்த நல்லநினைவையுமறந் துயிர் தேகமயமாய் நல் வினை தீவினைத்துன்பத் தொடர்ச்சியாற் பதைத்தறிவில்லாமல் அக்காலத்தி லுயிர் பசிப்பிச்சை யுற்றிருப்பதை யறிந்து பசி தெரியும்படி யறிவித்துக் கதறியழும்படி செய்வித்துப் பிள் ளையழுவதுகண் டுடனே பெறும்போதுற்ற வருத்தத்தையுந் தாயானவள் மறந்து உட்கி யாவிசோரும்படியுள்ளே நடுங்கி மிகுந்தோங்கிய வன்பினாலே யவள் சிந்தை யிளகி யுருகப் பச்சடம்பி லிருந்த இரத்தஞ் சிவப்புமாறி வெண்ணிறமுறு மாய்க் கொங்கையில்வந்து சுரக்கிற வந்த தீஞ்சுவைப் பாலைப் பிள்ளை வாய்வைத்துக்குடித்து முகஞ் செழித்திருப்பதுகண்டு தாய் மகிழ்ந் திருக்கும்படி செய்வித்திப்படிப் பிள்ளையாசை யென்கிற பெருங்கயிற்றினாற் கட்டிச் சகலவுயிர்களுக்குங் குழ ந்தைகளை வளர்க்கும்படிக்கு அன்பாக்கவேறு நேசத்தைவை த்தருளிய நெறி யெம்மையிரக்ஷிக்க.

ஆசற்ற, பாலைப்பசும்பதத்தும் பாலைமைப்பதத்து
காளுக்குநாட்சகல ஞானத்து - மூன்விக்குங்
கொண்டாளவாளக் கருவிகொடுத்தாக்கின்று
பண்டாரியான படிபோற்றி.

எ - து. தாயன்பா யிருந்திரக்ஷித்த கத்தா விப்படிசநித்துவரு முயிர்களுக்குக் கருப்பத்தி லிருக்கிற பசும்பருவத்தும் பாலனாயிருக்கிற அந்தப்பருவத்தும் நாளுக்குநாள் பரிணமித்து வளரும் பாலகுமார விருத்தப்பருவத்துஞ் சகலாவத்தைப் படுத்திப் பருவத்துக்கேதுவான கலாதிஞானத்தைக் கொடுத்துச் செயலற்றவுயிர்கள் வாங்கிக்கொள்ள வாள்வதற்கேற்ற முப்பத்தாறுவகைக் கருவிகளையுங்கொடுத் துயிர்க்குயிரா யிமைப்பொழுது நீங்காமனின்று பண்டாரியா யுயிர்க் கேவல்செய்யுங் கிருபை யெம்மை யிரக்ஷிக்க.

தண்டாத, புன்புலால்போர்த்த புழுக்குரம்பைமாமனையி
லன்புசேர்கின்றனகட் டைந்தாக்கி - முன்புள்ள
வுண்மைநிலைமை யொருகாலகலாது
திண்மைமலத்தாற் சிறையாக்கிக் - கண்மறைத்து
மூலவருங்கட்டி லுயிர் மூடமாயுட்கிடப்பக்
காலநியதி யதுகாட்டி - மேலோங்கு
முந்திவியன்கட்டி லுயிர் சேர்த்துக்கலைவித்தை
யந்தவராக மவைமுன்பு - நந்த
தொழில்மிவிச்சை துணையாகமானி
னெழி லுடையமுக்குணமு மெய்தி - மருளோடு
மன்னுமிதயத்திற் சித்தத்தாற்கண்டபொரு
ளின்னபொருளென் றியம்பவொண்ணு - வந்நிலைபோய்க்
கண்டவியன்கட்டிற் கருவிகளீரைந்தொழியக்
கொண்டுநியமித்தற்றை நாட்கொடுப்ப - பண்டை
யிருவினையான்முன்புள்ள வின்பதுன்பங்கண்
மருவும்வகையங்கே மருவி-யுருவுடனின்
றோங்குறுதலாய வோலக்கமண்டபத்திற்

போங்கருவியெல்லாம் புகுந்தீண்டி-நீங்காத
முன்னைமலத்தினிருண் மூடாவகையகத்துட்
டுன்னுமிருணீக்குஞ் சுடரேபோ-லங்கிலேய
ஆக்கஞ்சுடருருவிற் பெய்துதொழிற்றுகிய
ராக்கிப்பணித்த வறம்போற்றி.

எ - று. கர்த்தா பண்டாரிபோலநின்று தத்துவங்களை கூட்டி யிரக்ஷிக்கும்படி யெப்படியென்னில் நீங்காமற் புண்டலால்நாலுங் கோல்போர்த்த புழுக்கூடான சரீரமாகிய பெரியமனைக்குள் இருளையினாலே தூரியாதீதந் தூரியஞ் சுழுத்தி சொப்பனம் சாக்கிரமென்னும் பெயரையுடைய வைந்து கட்டாக்கி யான்மாவுக் காதியிலே பொருந்தின வுண்மையில்லையான வாணவமல மறைப்புச் சற்றுநீங்காமற் றிண்மையா யுயிரைச்சிறைப்படுத்தி நிற்கு மூலாதாரமாகியவீட்டி லைநீக்கப்பட்டுயிர் மூடமாயுட்கிடப்ப வவ்விடத்தி லிசைப்பாயுமட்டுங் காலத்தைநியதியிறை னிறுத்தி யப்பான்மேலே யோங்கியிருக்குந் துரியமான நாபித்தானவீட்டி லுயிரைப் பிராணவாயுவுடனே கூடச்சேர்த்து அவ்விடத்திலே கலைவித்தை யிராகத்தினுன் முன்னே யான்மாவினுடைய தொழிலறிவிச்சை மூன்றை மெழுப்பியதற்குத் துணையாகப் பிரகிருதிமாயையி லுண்டான வழகு பொருந்திய சாத்துவிக ராசத தாமத மென்று மூன்று ணங்களையுஞ்சேர்த் தப்பான் மேலே சுழுத்தி வீடாகிய விருதயத்தானத்திற் சித்தக்கருவியுடனே கூட்டி யவ்விடத்திற் சித்தத்தாற் கண்டபொரு ளின்னபொருளென்றறியாமல் மயங்கி நின்ற வுயிரைச் சொப்பன வீடாகிய கண்டத்தானத்திற் சேர்த்து அவ்விடத்திலே சத்தாதியைந்தும் வசனாதியைந்தும் அந்தக்கரணங்கள் நான்கும் வாயுக்கள் பத்தும் புருடனுமான விருபத்தைந்து கருவியுங்கூட்டி முன்னே செய்த விருவினைக் கீடாக முன்சாக்கிரத்திலே யின்ப துன்பத்தைப் புசிப்பித்த

முறைமைபோலச் சொப்பனத்திலு மிருவினைப்போக முண்டா
னது மறிந்து சுத்ததத்துவங்களினாற் பிரேரித்துப் புசிப்பித்
துப் பின்பதற்கு மேலாய தூலதேகத்தின்கண் வளர்ந்து நிற்கிற
சாக்கிரவீடாகிய நுதற்றானமாகிய வோலக்கமண்டபத்தின்
முன்கேவலாவத்தைக்குக் கூடாமனின்ற பூதங்களைந்தும் புருட
தத்துவமீங்கலாகநின்ற வித்தியாதத்துவமாறுஞ் சிவதத்துவ
மைந்து மாகப்பதினாறு முன் சாக்கிரத்தி லிருந்த ஞானேந்திரிய
மைந்துங் கன்மேந்திரிய மைந்துஞ் சொப்பனத்திலிருந்து
வந்த விருபத்தைந்து கருவியு மற்றப் புறக்கருவிக ளாற்பத்
தைந்து மாகத் தொண்ணூற்றாறு கருவிகளையும் பொருத்திச் சீவி
க்கும்படி செய்வித்து முன்னேவிட்டுநீங்காம லந்தவத்தை
யிருள் மறைத்துநின்ற வாணவமல மிருள்கூடாதபடி மனையிலே
நெருங்கியிராநின்ற விருளை நீக்கும் விளக்கைப்போலச் சூக்கு
மாதி வாக்குடனே கூடிப் பிரகாசித்து நிற்குஞ் சகலாவத்தையி
லுயிரை நிறுத்திக் கன்மத்துக்கேதுவான சத்தாதி விடயங்க
ளைக்காட்டி யான்மாக்கள் யானெனதென்று கர்ச்சித்துநின்
றவைகள் வெவ்வேறு தொழிற்குரியராம்படி செய்விக்குஞ்
சிவதர்ம மெம்மையிரட்சிக்க.

வேட்கைப்பிரு, மண்டிப்பொருட்டா லொருகால் வியாது
மண்டிப்பெரியபெருந்தோற்றுதற்குக் - கண்டிறல்சேர்
வல்லார்கள்வல்ல வகையாற்றொழிற்புரிக
வெல்லாமுடனே யொருங்கிசைந்து - செல்காலை
முட்டாமற்செய்வினைக்கு முற்செய்வினைக்குஞ்செலவு
பட்டோலையிட்டெம் பயபோற்றி.

எ - து. சுத்த சகலாவத்தையிற் கருவிகூட்டி முடிக்கு
மாகாயத்தைமறைத்து ஆன்மாக்கள் பிறந்த வாசையிருந்து
புசிப்புவிதித்திய மொரு கணமேனுமாறாமல் கெடாமல் வயிற்
றிலே மண்டியெரிந்து கொண்டிருக்கிற வடவாமுகாக்கினி

போன்ற பசியைத் தணிக்கும்பொருட்டுந் தின்னணியவாங்காரப் பலன்களால் வரவர வல்லமைக்கேற்ற தொழில்கள் செய்யுமிடத் தவர்களுக்குத்தோன்றும லுடனிகழ்ச்சியான வொருமைப்பாடாய்க் கூடிநின் றவரவர் வினையின்படி செய்வித்துக் கொடுத் தான்மாக்கள் யானெனதென் றிடையறுதுசெய்யும் வினை மிகுதியான வாகாமியத்துக்கு முன்செய்தவாறதுவை விலுங் கட்டுப்பட்டிருக்கிற சஞ்சிதத்துக்கு மதிலேயொகப்பட்டுப் புசிப்புக்குவந்த பிராரத்துவைச் செலவுக்கு மவரவர் கணக்கப்பிள்ளையாயிருந்து பட்டோலை யெழுதி யொப்பிக்குங் கருணையிரட்சிக்க.

நட்டோங்கு, மிக்கிலைமைமானுடருக் கேயன்றியெல்
மன்னுயிர்க்குமிந்தவழக்கேயாய்-முன்னுடைய [வினை
நானுள்வரையி லுடல்பிரித்துநல்வினைக்கண்
வானுளின்மாலா யயனுகி-நீனுகர்
வானுடர்கோமுதலாய் வந்தபெரும்பதத்து
நானுவிதத்தா னலம்பெறுநாட்-டான்மாள
வெற்றிக்கடுந்தூதர் வேகத்துடன்வந்து
பற்றித்தம்வெங்குருவின் பாற்காட்ட-விற்றைநங்கு
மில்லையோபாவி பிறவாமையென்றெடுத்து
நல்லதொரின்சொ னடுவாகச் - சொல்லியிவர்
செய்திக்குத்தக்க செயலுறத்துவீரென்று
வெய்துற்றுரைக்க விடைகொண்டு-மையறுநு
செக்கினிடைத்திரித்துந் தீவாயிலிட்டெரித்துந்
தக்கநெருப்புத்தூண்டழுவித்து-மிக்கோங்கு
காராசங்காய்ச்சிச் செவிமடுத்தூனவரித்து
மீராவுன் னூனைத்தின் னென்றடித்தும்-போராம
லங்காழ்நரகத் தழுத்துவித்தும்பின் னுந்தம்

வெங்கோபமாறுத வேட்கையரா - யிங்கொருநா
ளெண்ணிமுதற்காணுத வின்னற்கடுநரகம்
பன்னெடுநாட்செல்லும் பணிகொண்டு-முன்னோடிக்
கண்டெடன்கழித்தல் காரியமாமென்றெண்ணிக்
கொண்டுவருநோயின் குறிப்பறிவார்-மண்டெரியிற்
காய்ச்சிச்சுடவறுக்கக் கண்ணுரிக்கன்னிதிய
மீய்த்துத்தாய்நக்கைதமை நின்புறுதல்-வாய்த்தநெறி
யோடியயிதரின்றி றுயிர்போனதன்றலே
நீடுபெரும்பாவமின்றே நீங்குமென-நாடித்தன்
மைமந்தனையுமார்க்கோன் வழக்கேவழக்காக
நந்தனையமிக்கைநமன்றூதர் - வெஞ்சினத்தா
லல்லலுறத்து மருநாகங்கண்டிற்க
வல்லகருணைமறம் போற்றி.

எ - று. சத்தா வான்மாக்கள்செய்த விருவினைக்குங் கணக்கெழுதினபடிக்குப் புண்ணிய பாவத்துக்குள்ள பலன்களையுங் கூட்டுகிற தெப்படியென்னில் பொருந்தி யிருந்த விருவினை முறைமை பூமியிலுள்ள மானுடருக்கே யல்லாமலு மெண்ணில்லாத தனுக்களிலே பொருந்தியிருக்கிற பல வுயிர்களுக்கு மிந்த முறைமையாக வினைகளை நிச்சயித்தறிந்து முன்னமைத்த வாயுசுமுடிவி லுடல்களைப் பிரித்து நல்வினை யாகப்பட்ட வுயிர்களையெல்லாம் பூதசரீரமான திவ்விய சரீரத்துடனே கால நீட்டிப்பாய் வாழ்ந்திருக்கும்படிக்கு விஷ்ணுவுலகத்தில் விஷ்ணுரூபமாயும் பிரமலோகத்திற் பிரமரூபமாயுந் தேவலோகத்திற் றேவேந்திரரூபமாயுந் தேவர்களாயும்வந்த பெரிய பதப்பிராப்திகளிலே நானாவிதமான போகங்கள் புசித்திருக்கும்படி செய்வித்தும் பூமியிலே இராச ஐஸ்வரியத்துடனே வாழும்படி செய்வித்துமிருக்கு நாராயண புண்ணிய காமபலன் புசி

த்து முடிந்து பாவகன்மபலன் புசிக்குநா ளடுத்தவுடனே யங்
கங்கு வாழ்ந்திருந்தவுயிர்க ளந்தந்த தேகத்தை விட்டு மாறும்
படிக்குக் கர்த்தாவினுடைய வாக்கினையினாலே வெற்றியொருக்
கிய யமதூதர்கள் வேகத்துடனேவந்து பாசத்தினாற் கட்டிப்
பிடித்துக் கொண்டுபோய்த் தங்களரசனாகிய தருமராஜா
வின் முன்புவிடத் தருமராஜாவந்த ஆன்மாக்களைப் பார்த்திர
க்கிப் பாவிகா ளுங்களுங் கிறைவனைக் குள்ளாகப் பிறவாநெ
றிபெற வேண்டுமென்று கர்த்தாவைவிரும்பு மறிவு பிறக்கவில்
லையோவென்று நல்ல வின்சொல்லாக நடுவுநிலைமையாகப் பே
சிப் பின்பவர்கள்செய்த பாவத்துக்கேற்ற செயல்களைச் செய்யு
மென்று கோபத்துடனே கிங்கரர்களைப் பார்த்துச் சொல்ல
விடைபெற்றுப் பூதசரீரமான யாதனாசரீரத்திலே யுயிரையிருத்
தித் துன்பமுறும்படிக்குச் செக்கிலேயிட் டாட்டியுந் தீயி
லிட் டெரித்தும் பெரிய நெருப்புத்தூணைத் தழுவிக் கிடக்கும்
படிசெய்து மிகுந்து நீண்டிருக்கிற நாராசங்களைக் காய்ச்சிச்
செவியிலே செலுத்தியும் நாக்கைக் கருவிகொண் டறுத்தும்
அவரவரூனை யவரவர் தின்னும்படிக் அரிந்துகொடுத் தடித்தும்
போராதபடி யாழ்ந்த நரகங்களிலே யழுத்துவித்தும் பின்னுந்
தங்களுடைய கடுங்கோபமாறாத விச்சையுடையரா யவற்றிலே
யொருநாள்போல துன்பத்தைக் கொடாநின்ற கொடிய நரகங்
களிலே பலநெடுநாட் செல்லுமட்டு மியமகிங்கரர்கள் பணிசெ
ய்யக் காருண்ணிய வடிவாகிய கர்த்தா சிற்றுயிர்களை யயமகிங்க
ரர்களிடத்திலே காட்டிக்கொடுத்து அவர்கள் துக்கப்படுகிற
தைப் பார்த்திருப்பானே னென்னில் உலகத்திலே தந்தை தா
யானபேர்கள் பிள்ளையினுடைய நோய் மிகுதியை யுள்ளே
நாடியறிந்து நோய்தீரும்படிக் கதற்கேற்ற முறைமை செய்
வது கடனென்று நினைந்து பிள்ளையை நோயறிந்து மருந்து
கொடுத்துத் தீர்க்கும் வைத்தியத்தொழில் செய்கிறவனிடத்
திலே யொப்புவித்து அவனிருப்பு நாராசங்காய்ச்சிச் சுடவுஞ்

சத்திரமிட் டறுக்கவுங் கண்படலத்தை யுரிக்கவு மிப்படிப்பல
கிரியையுஞ்செய்யப் பிள்ளை வருத்தப்பட்டாலு நோய்தீர்ப்பதை
யறிந் தந்தவைத்தியனுக்கு நல்ல திரவியமுதலான வெகுமானம்
பண்ணிச் சந்தோஷத்துடனே யவர்கள் கண்டுநிற்பதுபோலவு
மனுச்சக்கிரவர்த்தியான சோழராஜா தானரிய தவம்பண்ணிப்
பெற்ற வருமையான வொருமகன் திருவாரூர்த் தெருவழியே
தேரேறிப் போம்பொழுது மாயமாகத் தேர்க்காலில் வீழ்ந்திற
ந்த பசுவின் கன்றினிமித்திய மந்தப் பாவந் தீரும்படிக் கெத்
துணைபேர்கள் மாறுபாடாய்த் தடுக்கவுங்கேளாமற் பிள்ளையைக்
கன்று தங்கினபடிக்குத் தேர்க்காலிலேபோட்டு நசுக்கிப்போட
வேண்டுமென்று துணிந்து தேரிலே தாய்ப்பசுவைவைத் தூர்
ந்துகொன்றது மகனை யமன்பிடித்து வருத்தாதபடிக்குச்செய்த
கிருபையே யானையா லந்தவழக்குப்போலவும் விடம்போன்ற
சிந்தையையுடைய நமன்றூதர் மிகுந்த கோபத்துடனே பாவ
ஞ்செய்த வுயிர்களைக் கொடிய நரகவாதனைப் படுத்துவதைச்
சகல வுயிர்களுக்குந் தந்தையுந் தாயுமாயிருக்கிற சிவமுஞ் சத்
தியு மலநோய் தீர்ந்தாற் போதுமென்று சந்தோஷத்துடனே
கண்டு நிற்கிற வல்லபமான கருணை மற்றெம்மை யிரட்சிக்க.

பல்லுயிர்க்கு, மின்னவகையாலிருவினைக்கணின்றருத்தி
முன்னைமுதலென்ன முதலில்லை-நல்வினைக்கு
னெல்லாவுலகு மெடுப்புண்டெடுப்புண்டு
செல்காலம்பின்னாகஞ் சேராமே-நல்லநெறி
யெய்துவதோர்காலந்தன் னன்பனாக்கண்டின்புறுத
லுய்யுநெறிசிறிதே யுண்டாக்கி-டையயவே
மட்டாய்மலராய் வருநாளின் முன்னைநாள்
மொட்டாயுருவா முறைபோலக்-கிட்டியதோர்
நல்லபிறப்பிற் பிறப்பித்துநாடும்வினை

யெல்லையிரண்டு மிடையொப்பிற்-பல்பிறவி
யத்தமறிலன்றோ வளவென்றுபார்த்திருந்து
சத்திபதிக்குந் தாம்போற்றி.

எ - து. கர்த்தா விங்ஙனஞ் சொன்ன வொன்பது வகையினாலு மிரட்சிக்கப்பட்ட வான்மாக்களுக்குப் பெத்தகால முடிவாகமட்டு மிருவினைப் பலன்களை யவரவரது முன்னிலையாகநின் றருத்தித் தனக்குமேலொரு கர்த்தாவில்லாத சகலபுவன கர்த்தாவாகிய சிவனந்த விருவினைகளுக் கிருப்பிடமான மாயா வுலகங்களை யெடுப்புண் டெடுப்புண்டு மாறிமாறி வரும்படிக் காரியா யநாதிதொடுத்துச் சிருஷ்டித்துந் திதித்துஞ் சங்கரித்துந் திரோபவித்து மநுக்கிரகித்துந் தமது சத்தியினாலே பஞ்சகிருத்தியங்களைச் செய்வித்து மலபரிபாகப்பட்டதை யறிந்து பின்னாகத்திற் செல்லும் பெத்தத்தை நீக்கி யான்மாக்களுக்கு முத்திக் காலத்தை நேர்ப்படுத்தவேண்டித் தனக்கன்பரான மெய்யடியார்களைக் கண்டவுடனே தன்னைக் கண்டதுபோல வந்த வான்மாக்க ளின்புற் றவரோவின பணிவிடைகேட் டெய்யும்படிக்குச் சிறிது நல்லவழியை யுண்டாக்கிக் காட்டி யதினல்வழியே சிவபுண்ணியமான புத்தி பூர்வத்தினா மபுத்திபூர்வத்தினா முபாயச் சரியையாதியினா முண்மைச் சரியையாதியினுமாகக் கிரமத்திலே செய்யப்படுத்தி யந்தமட்டாய் மலரவிருக்கிற வரும்பு பருவநீங்கிய வரும்பருவத்துக் கடுத்த முதனான மொட்டாயிருக்கிற மலர்போல் மலம் பரிபாகம் பிறந்ததன்மை சமீபத்திற் கண்டு ஒப்பற்ற நல்ல சிவசமயத்திற் பத்திமிருக்க விடத்திலே பிறப்பித்து நாட்பட்ட விருவினையு மேககாலத்திலே யிரண்டுந் தராசு தானிபோலச் சமனுனபருவத்திலே பலபிறவியு மந்தமாம்படிக்குத் தமது தீவிரதரம் பொருந்தின வருட்சத்தியை யவ்வுயிர்களின் மலநீங்கும்படிக்குப் பதிக்குந்தா மெம்மை யிரட்சிக்க.

முத்திதரு, நன்னெறியின் ஞானகலர் நாடுமல மொன்றி
மந்நிலையேயுண்ணின் றுறுத்தருளிப்-பின்னன்பு [னையு
மேவாவிளங்கும் பிரளயாகலருக்குத்
தேவாய்மலகன்மந் தீர்த்தருளிப் - பூவலயந்
தன்னின்றுநீங்காச் சகலர்க்கவர்போல
முன்னின்றுமும்மலந்தீர்த்தாட்கொள்கை- யன்னவனுக்
காதிகுணமாதலினு லாடுந்திருத்தொழிலுஞ்
சோதிமணிமிடற்றுச் சுந்தரமும்-பாதியாம்
பச்சைபிடமும் பவளத்திருச்சடைமேல்
வைச்சநதியு மதிக்கொழுந்து - மச்சமற
வாடுமரவு மழகார்த்திருநுதன்மே
னீடுருவவன்னி நெடுங்கண்ணும்-கேடிலயங்
கூட்டுந்தமருகமுங் கோலவெரியகலும்
பூட்டரவக்கச்சும் புலியதளும் - வீட்டின்ப
வெள்ளத்தழுத்தி விடுந்தாளினுமடியா
ருள்ளத்திலும்பிரியா வொண்சிலம்புங் - கள்ளவினை
வென்றுபிறப்பறுக்க சாத்தியவீரக்கழலு
மொன்றுமுருத்தோன்றும ஹுள்ளடக்கி - யென்று
மிறவாதவின்பத் தெமையிருத்தவேண்டிப்
பிறவாமுதல்வன் பிறந்து - நறவாருந்
தாருலாவும்புயத்துச் சம்பந்தநாதனென்று
பேரிலாநாதனொரு பேர்புனைந்து - பாரோர்த
முண்டியுறக்கம் பயமின்பமொத்தொழுகிக்
கொண்டுமகிழ்ந்த குணம்போற்றி.

எ - து. இருவினையொப்பு மலபரிபாகஞ் சத்திநிபாதமும்
பெற்ற பக்குவான்மாக்களுக்குக் கர்த்தா வாசாரியமூர்த்தமா யநு

க்கிரகம் பண்ணுகிற முறைமை யெப்படியென்னில் முத்தி
யைக்கொடுக்கு நல்வழியையுடைய விஞ்ஞானகலர்க் கவர்கள்
பற்றியிருக்கிற வாணவமல மொன்றினையு மவர்களறிவுக்குட்
பேறறிவாய்ப் பிரகாசித்துத் தோன்றி நீக்கி யருள்வடிவாக்கி
ஞேயத்தி லழுந்தும்படி காட்டிப்பர். பின்பு பொருந்திவிள
ங்காநின்ற பிரளயாகலருக்குத் திருவுரு காணும்படிக்கு மா
னுமழுவுஞ் சதுர்ப்புஜமுங் காளகண்டமுந் திரிநேத்திரமுமு
டைய திருமேனிகொண்டிருந்து அவர்களைப் பற்றியிருக்கிற
வாணவமலங் கன்மமல மிரண்டையு நீக்கி யருள்வடிவாக்கி
ஞேயத்தி லழுந்தும்படி காட்டிப்பர். அசுத்த மாயையிற்றோ
ன்றிய பூலோகத்தை விட்டு நீங்காமலிருக்கிற சகலருக் கவர்
களைப்போல மானிடச் சட்டைசாத்தி மானைக்காட்டி மானைப்
பிடிப்பார்போல முன்னின்று தரிசனைகொடுத் தவர்கள் பற்றி
யிருக்கிற வாணவங் கன்ம மாயையென்னு மூன்று மலங்களை
யுந் தீக்ஷாக்கிரமங்களினாலே தீர்த்தருள்வடிவாக்கி யடிமையா
க்கிக் கொள்ளுத லந்தக் கத்தாவுக் காதிகாலத்திலே யுண்டான
குணமாதலாற் றிருச்சிற்றம்பலத்தின் கண்ணே நின்றாடுகிற
திருநடனத்தொழிலும் பிரகாசம் பொருந்திய நீலமணிபோன்
றிலங்குகிற காளகண்டமுந் திருமேனியிற் பாதியாய்ப் பச்சை
வடிவுகொண் டிலங்குஞ் சிவகாமியாகிய விடப்பாகமும் பவ
ளக்கொடி படர்ந்து கிடப்பதுபோன்ற திருச் சடாபாரத்தின்
மேற் றரித்திருக்கிற கங்கையும் பாலசந்திரப் பிறையும் வெரு
வும்படிக்குப் படம்விரித்தாடுகிற சர்ப்பமும் அருகு விளங்க
திருநுத னடுவின்மேனோக்கி நீண்டுகிடந் திலங்கு மக்கினி
நேத்திரமும் வலக்கையிற் பிடித்திருக்கிற கெடுவ்வாத லயத்
துடனே முழங்குந் தமருகமு மழகுபொருந்திய விடதுகை
யிற் பிடித்திருக்கிற வக்கினி குண்டலமு மரையிலே கட்டி
யிருக்கிற வைந்தலை யரவக்கச்சும் புள்ளிபொருந்திய புலித்
தோலுடையும் பக்குவான்மாக்களை மோக்ஷமாகிய பேரின்ப

வெள்ளத் தழுத்துதற் கூன்றின பாதத்தினு மடியா ருள்ளத் திற்கலந் தின்பபூரணமாயிருக்கிற ஞான குஞ்சிதபாதத்தினும் பிரியாமற் றரித்திருக்கிற திருவருட்பிரகாசம்பொருந்திய சில ம்பு மூயிர்களைச் சோரத்தனமாய்க் களவுகொண்டு தன்வசப்ப டுத்துகிற முன்னை வினையைவென்று பிறவித்துன்பங்களை யறுப்பதற்கு மலவைரிநாமென்று முழந்தாளிற் றரித்துக்கொண் டிருக்கிற வீரகண்டாமணியையு மிவைகளொன்று முருத்தோன் றுதபடி யுள்ளேயடக்கி யொளித்துக்கொண் டென்றுமுடிவில் லாதபேரின்ப மோக்ஷத்தி லெம்போல்வாரையு முறுத்தவேண் டிப் பிறவாமுதல்வன்பிறந்து வந்தானென் றதிசயமாய்ச் சொல்லும்படிக்குத் திருமேனிகொண்டு தேன்பொருந்திய செங்கழுநீர்மாலையுலாவும் புயத்தையுடைய மறைஞான சம்பந் தநாதனென்றொரு பெயருஞ் சுபாவத்திலில்லாதநாத னொரு திருப்பெயருஞ் சாத்திக்கொண்டு பூமியிலுள்ளவர்களைப்போல வுண்பதும் உறங்குவதும் அஞ்சுவதும் விடயபோக மின்பமுறு வது மொத்தொழுகிக்கொண் டெழுந்தருளி மகிழ்ந்திருந்த குண மெம்மையிரட்சிக்க.

மிண்டாய, வாறுசமயப்பொருளு மறிவித்தவற்றிற்
பேறின்மையெங்களுக்கே பேறுக்கித் - தேறாத
சித்தந்தெளியத் திருமேனிகொண்டுவரு
மத்தகைமைதானே யமையாமல் - வித்தகமாஞ்
சைவநெறியிற் சமயமுதலாக
வெய்துமபிடேக மெய்துவித்துச் - செய்யதிருக்
கண்ணருளானோக்கிக் கடியபிறப்பாற்பட்ட
புண்ணுமிருவினையும் போயகல - வண்ணமலர்க்
கைத்தலத்தைவைத்தருளிக் கல்லாயநெஞ்சுருக்கி[ கும்
மெய்த்தகைமையெல்லாம் விரித்தோதி - யொத்தொழு

சேணாரிருள்வடிவுஞ் செங்கதிரோன்பானிற்பக்
காணாதொழியுங் கணக்கேபோ - லாணவத்தி
னூதிருநறையாம லென்பாலணுகாம
னீதிநிறுத்து நிலைபோற்றி.

எ - து. இப்படி மானுடனைப்போலத் திருமேனிகொண் டாசாரியமூர்த்தமாய்ப் பெண்ணாகடத்திலக மெழுந்தருளியிருந் தெங்களுக் ககங்காரம்பொருந்திய புறச்சமயப் பொருள்களெல்லா மறிவித்ததிலே யொருபிரயோசனமு மில்லையென்றறிவிற இடமே பெறும்படி செய்வித்துத் தெருளவிருந்த அந்தந்தெளியும்படிக்குத் திருமேனி தரிசனைகொடுத்தருளிய வந்தத் தகைமையும் போகாமன் மேம்பாடாகிய மெய்கண்ட சந்தானச் சுத்தசைவநெறியில் விட்ட குறையறிந்து சமய விசேட நிருவாணம் பொருந்தப்பட்ட வபிடேகமென்னு நான்குவகைத் தீட்சையும்பண்ணிச் சிவந்த தாமரைமலர்போன்ற திருக்கண்ணருளினாற் பார்த்துத் துன்பப்பிறப்பிறப்பட்ட புன்னுடம்புத் துன்பமு மிருவினைத்துன்பமு முயிரைவிட்டு நீங்கும்படிக் கழகுபொருந்திய தாமரைமலர்போன்ற திருக்கைத் தலத்தைச் சிரசிலேவைத்தருளிக் கற்போன் றிருந்த நெஞ்சை யக்கினியைச் சேர்ந்த மெழுகுபோல வுருக்கித் திரிபதார்த்த மெய்த்தகைமைப் பொருள்களெல்லாம் விரித்தோதி யுபதேசித் தொற்றுமையாக வாகாயத்தை மறைத்த பூதவிருள்வடிவானது அந்த ஆகாயத்திற் சிவந்த சூரிய னுதையமானவுடனே பூதவிருட்பிரகாசமாய் மறைந்து நீங்க வாகாயஞ் சூரியவொளி வடிவாகி நின்ற முறைமைபோல வுபதேசித்த ஞானப்பிரகாசத்தைப் பற்றி மும்மலமுநீங்கி யான்மபோத மருளிலடங்கச்செய்து மலமான்மபோதத்தையும் பற்றுமற் றன்னுடைய வநாதி நித்தியமுங் கெடாம னீதியாகவிருத்தின நிலைமை மெய்ம்மை யிரட்சிக்க.

மேதக்கோர், செய்யுஞ்சரிதை திகழ்கிரியாயோகத்தா
லெய்துஞ்சீர்முத்திபத மெய்துவித்து - மெய்யன்பாற்
காணத்தகுவார்கள் கண்டாற்றமைப்பின்பு
காணத்தருஞான நன்னெறியை - வீணே
யெனக்குத்தாவேண்டி யெல்லாப்பொருட்கு
மனக்குமலரயன் மால்வானோர் - நினைப்பினுக்குந்
தூரம்போலேயணிய சுந்தரத்தாளென்றலைமே
லாரும்படித் தருள்செய்த - பேராளன்
றந்தபொருளேதென்னிற் றன்வேறுநான்வேறாய்
வந்துபுணராவழக்காக்கி - முந்தியென்ற
னுள்ளமென்றுநீங்கா தொளித்திருந்துதோன்றிநிற்குங்
கள்ளமின்றுகாட்டுங் கழல்போற்றி.

எ - து. உலகப்பற்றற மேம்பாட்டுடனே தாதமார்க்கஞ் சற்புத்திரமார்க்கஞ் சகமார்க்கஞ் சன்மார்க்கமென்னு நான்கு வழியினுநின் னுண்மைச் சரிதை கிரியாயோகங்களை விதிப் பாம லநுட்டித்துச்செய்த வடியார்களுக்குச் சிறப்புமிகுந்த பதமுத்தியான சாலோக சாமீப சாரூப மெய்தும்படி செய் வித்து அதனுல் ஞானதாகமுற்ற வடியார்க ளநுக்கிரகத்தைப் பெற்று மெய்யன்பினுலே சிவரூபத்தி லான்மதரிசனைபண்ணிச் சிவதரிசனத்தி லான்மாவின்றன் னியல்பை யறிந்து பின்பு பெத்தமுத்தி யிரண்டினு முபகரித்து இரட்சிக்கிற கர்த்தாவி னுடைய கருணையை மறந்து நாமொரு முதலென்றிருந் தோமே யென்று லச்சைப்பட்டு நாணிப் பரைப்பரவையுருவின முத்தி யிரண்டற் றநுபவிக்குஞ் சிவாநுபவத்தைத் தமியா னுஞ் சிவசிவாவென்று நினையாத வெனக்கும் வீணே யிரங்கி யநுக்கிரகம் பண்ணவேண்டி வேதாகம புராணசாத்திரங்களிற் சொல்லப்பட்ட வெல்லாப்பொருளுக்கு மனத்துக்குந் தாமரை

மலரி னெழுந்தருளி யிருக்கும் பிரம விஷ்ணு முதலாகிய தேவர்கணிளைப்புக்குந் தெரியப்படாத தூரம்போலே நின்றும் ஜடசித்துக்களிடத்தினு மணித்தாய் நிறைந்திருக்கிற வழகு பொருந்திய சீர்பாத கமலத்தை யடியேன் சிரசின்மீதிருந்து பிரகாசிக்கும்படிக்கு வைத்தநுக்கிரகம் பண்ணிப் பெரிய மகா தேவனென்னும் பெயரையுடைய மறைஞான சம்பந்த ஞானா சாரிய னெனக் கநுக்கிரகம் பண்ணின பொருளேதென்னிற் றான்வேறு நான்வேறாய்வந்து பொருந்தின இல்லையென்னும் வழக்கை யறிவித் ததாகிய தொடுத்துன்னிடத்திலே யொளி த்திருந்து நீ நம்மைக்காணு திருக்க நாமென்று முன்னைக் கண்டு கொண்டிருந்தோ மென்கிற கள்ளத்தை யிப்போதுயிர்க்குயி ராய்ப் பிரகாசித்துநின் றறிவித்த பாதமான தெம்மையிரக்ஷிக்க.

வள்ளைமையாற், றன்னைத்தெரிவித்துத்தன்றாளிணையட்டிட
வென்னைத்தெரிவித்த வெல்லையின்கண்-மின்றோன்றும் [த்த
வண்ணமுருவ மருவுங்குணமயக்க
மெண்ணுங்கலைகால மெய்ப்பொருளு-முன்னமெனக்
கில்லாமைகாட்டிப்பின் பெய்தியவாகாட்டியினிச்
செல்லாமைகாட்டுஞ் செயல்போற்றி,

எ - து. வளப்பமிகுந்த கிருபையினாற் கர்த்தா தன்னைத் தெரிவித்துத் தன்பாததாமரையான திருவருளுக்குள்ளே பிரி யாமலென் றுங்கிடந்த வென்னையுந் தெரிவித்த வெல்லைக்கண் மின்போன்று தோன்றியழிகிற வண்ணத்தையுடைய தேகமுந் தேகத்தைப்பொருந்திய குணமயக்கங்களு மறிவைவிளக்கப் பட்ட கலையாதி முதலாகிய தத்துவங்களு முன்னில்லாத கேவ லாவத்தைதனை முன்னேயறிவித்துப் பின்பு தேகமுதலிய கரு விகரணாதிகளுங் கூடின சகலாவத்தையு மறிவித்து இனியரு ளைவிட்டுத் தேகமுதலான கருவிகரணாதிகளிற் செல்லாத சுத் தாவத்தையு மறிவித்தசெய லெம்மையிரக்ஷிக்க.

எல்லாம்போய்த், தம்மைத்தெளிந்தா ராய்த்தாமேபொ
யெம்மைப்புறங்கூறி யின்புற்றுச்-செம்மை [ருளாகி
யவிகாரம்பேசு மகம்பிரமக்காரர்
வெளியாமிருளில் விடாதே - யொளியாய்நீ
நின்றநிலையே நிகழ்த்தியொருபொருள்வே
றின்றியமையாமை யெடுத்தோதி - யொன்றாகச்
சாதித்துத்தம்மைச் சிவமாக்கியிப்பிறவிப்
பேதந்தனிலின்பப் பேதமுறாப் - பாதகரோ
டேகமாய்ப்போகாம லெவ்விடத்துங்காட்சிதந்து
போகமாம்பொற்றாளி னுட்புணர்த்தி - யாதியுட
னிற்கவழியா நிலையிதுவேயென்றருளி
யொக்கவியாபகந்த னுட்காட்டி - மிக்கோங்கு
மானந்தமாக்கடலி லாராவமுதளித்துத்
தான்வந்துசெய்யுந் தகுதியினா - லூனுயிர்தான்
முன்கண்டகாலத்து நீங்காதமுன்னோனை
யென்கொண்டு போற்றிசைப்பேனியான்.

எ - று. எல்லாத் தத்துவங்களையும் பொய்யென்றுகண்டு நீங்கித் தம்மைத்தெளிந்தோமென்று நமக்குமேலே வேறொருபொருளில்லையென்றுஞ் சைவசித்தாந்திகளுடனே கூடலாகாதவர்நமக்குப் புறம்பென்றும்பேசித் தன்னின்பத்தைத் தானே புசித்திருப்போமென்று மகிழ்ச்சியுற்றுச் செவ்விதான நிருவிகாரி நாமேயென்றுபேசி யகமே பிரமமென்னும் வாதிகள் தன்னையுமறியாமற் றலைவனையு மறியாமன் மயங்கிநிற்கிற வெளிபோன்ற விருளி லென்னைவிடாமல் ஞானசொரூப வொளிவடிவா யிப்போது நிற்கிற நிலையென்று நிகழ்த்தி யிதற்குமேலே வேறொருபொருளின்றி யமையாமையு மெடுத்தோதி யான்மாவைச் சிவத்துடனே யொன்றாகும்படி சாதித்

து தம்மைச் சிவமாக்கி யிந்தப் பிறவிப்பேதமாகிய சரீரத்திலே தானே ஜீவன்முத்தித் தன்மையும் பரமுத்தித்தன்மையுஞ் சரியாகக்கண்டு வெற்றின்பமான சிவபோகம் புசியாமல் சமவாதம்பேசி யான்மசத்தியுடனேகூடி யின்பம் புசிப்போமென்கிற பாதகரோடுங்கூடி யேகமாய்ப் போகாமலெனைக் கைவிடாத் தாங் குருலிங்கசங்கமாய்க் காட்சிகொடுத்து மேலானபோகமுண்டாகிற திருவருட்பாதத்திற் பிரியாம லுன்னோடடங்கிக் கிடக்கும்படி பொருத்துவித்து ஞேயத்திலழுந்திநிற்கு மதீயாதசாயுச்சியநிலை யிந்தவருணிலையென்று விகற்பந்தோன்றாம லநுக்கிரகித்துத் தமதுபரிபூரண வியாபகத்துள்ளே யானுமொக்கவியாபித்து நிற்குந் தன்மையுங்காட்டி யிருக்கோங்கி யளவுபடாம னிறைந்துநின்ற தமது போகத்துத் திருவருட்கடலில் விளைந்த வாராதநேயவமுதத்தைப் புசித்துக் களித்திருக்கும்படி நாமேயென்னைத் தேடிவந்தாண்டுகொண்ட பெருங்கருணைத் தகுதியினு லாருயிர்தானே முதன்மையென்று நின்றவெத்தனைலத்து மதற்குமுதன்மையுங் கொடுத்து நீங்காமனின்ற முன்னோனை யொத்திதங்கொண்டு புகழ்ந்து போற்றுவேனியான்.

போற்றிதிருத்தில்லை போற்றிசிவபோகம் [பெங்கள்
போற்றியவன்மெய்ஞ்ஞானப் புண்ணியநூல் - போற்றி
வெம்பந்தவாழ்க்கைவிட வேறாய்வந்தானென்ற
சம்பந்தமாமுனி பொற்றாள்.

போற்றிப்பஃறொடை மூலமும் உரையும் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.